Australian Government
Services Australia

TAMIL

# Disaster Recovery Allowance

# (‘பேரிடர் மீட்சிப் படித்தொகை’)

**Disaster Recovery Allowance (‘பேரிடர் மீட்சிப் படித்தொகை’) என்பது பேரிடர் என அறிவிக்கப்பட்ட நிகழ்வு ஒன்றின் காரணமாக உங்களுடைய வருமானத்தை நீங்கள் இழந்திருந்தால் உங்களுக்கு உதவுவதற்காக அளிக்கப்படும் ஒரு குறுகிய-காலக் கொடுப்பனவாகும்.**

உங்களுடைய வருமானத்தை நீங்கள் இழந்த திகதியிலிருந்து 13 வாரங்கள் வரைக்கும் நீங்கள் இதைப் பெறலாம்.

அதிகபட்சமான கொடுப்பனவு வீதமானது, உங்களுடைய சூழ்நிலைகளின் அடிப்படையில், JobSeeker Payment (‘ஜாப்-ஸீக்கர் பேமெண்ட்’) அல்லது Youth Allowance (‘யூத்-அலவன்ஸ்’)-ஐப் போன்றதாக இருக்கும்.

## இதை யார் பெற இயலும்

DRA படித்தொகையைப் பெற, நீங்கள் பின் வரும் அனைத்தையும் பூர்த்தி செய்தாக வேண்டும். நீங்கள்:

- பேரிடர் நிகழ்வு ஏற்பட்டபோது 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்திருக்க வேண்டும்
- ஒரு ஆஸ்திரேலிய வசிப்பாளராக அல்லது தகுதியளிக்கும் விசா ஒன்று வைத்திருப்பவராக இருக்கவேண்டும்
- Local Government Area (LGA) பாதிக்கப்பட்ட (‘உள்ளூர் அரசாங்கப் பகுதி’)-யில் வேலை செய்துகொண்டு அல்லது வசித்துக்கொண்டிருக்க வேண்டும்
- நிகழ்ந்த பேரிடரின் நேரடி விளைவாக வருமானத்தை இழந்திருக்க வேண்டும்
- உங்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்ட பிறகு வரும் வாரங்களில் சராசரி வாராந்திர வருமானத்திற்கும் குறைவான சம்பாத்தியம் இருக்கவேண்டும்.

நீங்கள் 16-21 வயதிற்கு இடைப்பட்டவர் என்றால், நீங்கள் யாரையும் சாராமல் இருப்பவராக இருக்கவேண்டும்.

சராசரியான வாராந்திர வருமானத்தைக் கணக்கிட நாங்கள் ‘ஆஸ்திரேலிய புள்ளிவிவர செயலக’த்தின் விவரங்களைப் பயன்படுத்துவோம்.

நிகழ்ந்த பேரிடரின் நேரடி விளைவு ஒன்றில் பின் வருவன உள்ளடங்கலாம்:

- நிகழ்ந்த பேரிடரின் காரணமாக உங்களுடைய வேலைத்தலம் மூடப்பட்டுள்ளமை
- சாலை அடைப்புகளின் காரணமாக உங்களால் வேலைக்குப் போக இயலாமல் இருந்தமை

பேரிடர் நிகழ்விற்குப் பிறகு வர்த்தகத்தில் ஏற்பட்ட பொதுவான புரள்வுக் குறைவு' (downturn)-ஐ இது உள்ளடக்காது.

## உங்களுக்குத் தேவைப்படும் ஆதாரங்கள்

உங்களுடைய வருமான இழப்பிற்கான ஆதாரத்தை எமக்குத் தருமாறு உங்களைக் கேட்போம்.

நீங்கள் ஊதியம் அல்லது கூலி ஒன்றை ஈட்டிக்கொண்டிருந்தால், பேரிடர் நிகழ்விற்கு முந்தைய 4 வாரங்களுக்கான உங்களுடைய வருமானத்தைக் காண்பிக்கும் ஆவணங்கள் வேண்டுமெனக் கேட்போம்.

ஒவ்வொரு வாரமும் உங்களுடைய வருமானம் மாறிக்கொண்டிருந்தால், நிகழ்விற்கு முந்தைய 8 வாரங்களுக்கான உங்களுடைய வருமானத்தைக் காண்பிக்குமாறு உங்களைக் கேட்போம்.

ஆதாரங்களில் பின்வருவன உள்ளடங்கலாம்:

- உங்களுடைய முதலாளி கொடுக்கும் சம்பளத் துண்டுகள்
- உங்களுடைய முதலாளியால் உங்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகைகளைக் காண்பிக்கும் முந்தைய வங்கிக் கணக்கு-விவரங்கள்
- உங்களுடைய முதலாளியால் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்று.

நீங்கள் ஒரு விவசாயி அல்லது சிறு வர்த்தக முதலாளி என்றால், பின் வரும் ஆவணங்களில் உங்களால் இயலுமான அனைத்தையும் எமக்குக் காண்பிக்குமாறு உங்களைக் கேட்போம்:

- இலாப-நஷ்டக் கணக்கு விவரங்கள்
- வருமான வரி அறிவிப்புகள்
- உங்களுடைய வர்த்தகப் பணப் புழக்கத்தைக் காண்பிக்கும் வங்கிக் கணக்கு விவரங்கள் போன்ற பணப் புழக்கம் சம்பந்தப்பட்ட மற்ற ஆவணங்கள்
- அறக்கட்டளை அல்லது பங்குதாரருக்கு உரிய வரி அறிவிப்பு.

இந்த ஆதாரங்கள் உங்களிடம் இல்லையென்றால் எம்முடன் தொடர்புகொண்டு பேசுங்கள்.

# இந்த உதவியைக் கோருவது எப்படி

கோரிக்கையை ஏற்படுத்துவதற்கு மிக விரைவான வழி 180 22 66 எனும் இலக்கத்தினை அழைப்பதாகும். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி உள்ளூர்-நேரம் வரை இந்தத் தொலைபேசி இலக்கம் இயக்கத்தில் இருக்கும்.

உங்களுக்குத் தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பளர் ஒருவர் இலவசமாக வேண்டுமென நீங்கள் கேட்கலாம்.

வாழ்க்கைதுணை சோடியில் நீங்கள் ஒருவரானால், நீங்கள் இருவரும் இந்தக் கொடுப்பனவிற்காக கோரிக்கை விடுக்கலாம். நீங்களும் உங்களுடைய வாழ்க்கைத்-துணைவரும் வெவ்வேறு கோரிக்கைகளை ஏற்படுத்தவேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்கு servicesaustralia.gov.au/disaster எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள். இதில் பின் வருவன உள்ளடங்கும்:

- தகுதிபெறும் LGA-க்கள்
- கோரிக்கை ஏற்படுத்துவதற்கான தெரிவுகள்
- எமது சேவைகளைப் பெறும் விதம்
- யாரையும் சாராதவர்கள் என்று நாங்கள் யாரைக் கருதுகிறோம் என்பது
- சராசரி வாராந்திர வருமானத்தை நாங்கள் கணக்கிடும் விதம்.

# மேலதிகத் தகவல்களுக்கு

- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களைப் பெற servicesaustralia.gov.au/disaster எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்களுடைய மொழியிலுள்ள தகவல்களை வாசிக்க, செவிமடுத்துக் கேட்க அல்லது காணொலிகளைப் பார்க்க servicesaustralia.gov.au/yourlanguage எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- Centrelink (‘செண்ட்டர்லிங்க்’)-இன் கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி எங்களுடன் உங்கள் மொழியில் பேச 131 202 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.
- சேவை மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள்.

குறிப்பு: உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ஆஸ்திரேலியாவில் எவ்விடத்திலும் உள்ள ‘13’ இலக்கங்களுக்குச் செல்லும் அழைப்புகளுக்கு நிலையான வீதம் ஒன்றின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்படும். உள்ளூர் அழைப்பிற்கு ஆகும் கட்டணத்திலிருந்து இது மாறுபடலாம், மற்றும்

தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கு இடையேயும் இது மாறுபடலாம். உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசிகள் அல்லது கைப்பேசிகளில் இருந்து செல்லும் அழைப்புகளுக்கு ஆகும் நேரம் கணக்கிடப்பட்டு, அதியுயர் வீதக் கட்டணங்கள் அறவிடப்படக்கூடும்.

## நீங்கள் பெறும் உதவித்தொகைகளை நிர்வகிக்கும் விதம்

DRA படித்தொகையை நீங்கள் பெற்றுவருகிறீர்களேயானால், உங்களுடைய சூழல்களில் ஏற்படும் எவ்வொரு மாற்றங்களையும் நீங்கள் எங்களுக்குக் கட்டாயமாக அறிவிக்க வேண்டும். DRA படித்தொகையை நீங்கள் பெற்றுவரும் காலத்தில் சராசரி வாராந்திர வருமானத்திற்கு சமமான அல்லது அதைவிட அதிகமான வருமானத்தை நீங்கள் ஈட்டினால் அதுவும் நீங்கள் அறிவிக்கவேண்டிய விடயங்களில் உள்ளடங்கும்.

## பொறுப்புத்துறப்பு

இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்களாவன கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு வழிகாட்டி என்ற முறையில் மட்டுமே தரப்பட்டுள்ளன. கொடுப்பனவு ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்கப் போகிறீர்களா என்பதும், உங்களுடைய குறிப்பிட்ட சூழல்களுக்கேற்ற விண்ணப்பம் ஒன்றை ஏற்படுத்துவதும் உங்களுடைய பொறுப்பாகும்.

# Disaster Recovery Allowance

**Disaster Recovery Allowance (DRA) is a short term payment to help you if you lose income as a direct result of a declared disaster.**

You can get it for up to 13 weeks, starting from the date you lose income.

The maximum payment rate is the same as JobSeeker Payment or Youth Allowance, based on your circumstances.

## Who can get it

To get DRA you must meet all of the following. You:

- were 16 years or older at the time of the disaster
- are an Australian resident or hold an eligible visa
- work or live in an affected Local Government Area (LGA)
- lose income as a direct result of the disaster
- earn less than the average weekly income in the weeks after you had your income loss.

If you are 16 – 21 years old, you must be independent.

We use Australian Bureau of Statistics figures to work out average weekly income.

A direct result of the disaster can include the following:

- your workplace has closed due to damage from the disaster
- road closures stopped you getting to work

It does not include a general downturn in business following an event.

## What evidence you need

We will ask you to give us evidence of your loss of income.

If you earn a salary or wage we will ask you for documents that show your income for the 4 weeks before the disaster.

If your income changes each week we will ask you to show your income for the 8 weeks before the disaster.

Evidence can include:

- pay slips from your employer
- bank statements showing previous bank deposits from your employer
- a letter from your employer.

If you are a farmer or you have a small business we will ask you to show us as many of these documents as possible:

- profit and loss statements
- income tax returns
- other documents that show cash flow such as a bank statement for your business
- trust or partnership tax return.

Speak to us if you do not have this evidence.

## How to claim

The fastest way to claim is to call **180 22 66**. The phone line is open Monday to Friday, from 8 am to 5 pm local time.

You can ask for an interpreter for free if you need one.

If you are a member of a couple, you can both claim this payment. You and your partner must make separate claims.

Go to **servicesaustralia.gov.au/disaster** for more information. This includes:

- eligible LGAs
- claiming options
- how to access our services
- who we consider to be independent
- how we calculate average weekly income.

## For more information

- go to **servicesaustralia.gov.au/disaster** for more information in English
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch videos with information in your language
- call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- visit a service centre.

Note: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## How to manage your payment

If you get DRA you must tell us about any changes in your circumstances. This includes if you earn more than or the same as the average weekly income while you get DRA.

### Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It is your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.